# உநெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

**மன்ற பொருள்.1.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.4973/2017/B1 நாள் 19.04.2018 ன் படி மாண்புமிகு அமைச்சர்கள் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்ததின் அடிப்படையில் நகரில் உள்ள சொத்துவரி விதிக்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்கப்படவேண்டும் எனவும் .அவற்றிற்கான செலவை அவர்களது சொத்து வரியில் தவனண முறையில் வசூல் செய்யபடவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு வருவாய் பெறுகும் . மேலும் பராமரிப்பு செலவுகள் செய்ய ஏதுவா இருக்கும் .இதற்காக விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்து சமர்ப்பிக்கும் படி தெரிவிக்கப்பட்டது . இதன் அடிப்படையில் கீழ்கண்ட விவரப்படி திட்ட அறிக்கைகள் தயார் செய்யபட்டு நிதி ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

| | |
|---|---|
| மொத்த வீட்டுவரி விதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | – 7041 |
| குடியிருப்பு | – 6009 |
| வணிகம் | – 805 |
| தொழில் | – 227 |

| | |
|---|---|
| குடிநீர் குழாய் இணைப்பு கொடுக்கப்பட்ட வீடுகள் | – 3979 |
| குடியிருப்பு | – 3953 |
| வணிகம் | – 26 |
| தொழில் | – 0 |

தற்பொழுது குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட வேண்டிய வீடுகள் 2077

| | |
|---|---|
| Sameside of existing D-main – 627x3650 | = 22.89 |
| Road Crosssing existing D-main – 1450x5400 | = 78.30 |
| LS | = 0.06 |
| மொத்தம் | = **101.25** |

அலுவலககுறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந .க.எண் 2020/2017/இ1

**மன்றப்பொருள்.2.** சென்னை உயர்நீதி மன்றத்தில் இந்நகராட்சியில் பணிபுரியும் திரு. கே. செல்வமோகன் வருவாய் ஆய்வாளரால் தொடரப்பட்ட வழக்கு எண் 34245/2017 , நகராட்சி நிர்வாக அணையரகம் சென்னை – 5 அவர்களின் கடித எண் 8253/2018/J3 நாள் 23/03/2018 ன் படி அரசு சார்பாக இவ்வழக்கில் வாதாடவும் திரு. விஜய நாராயணன் அவர்களுக்கு ரூ. 18,000/– வழங்கிடவும் மற்றும் இந்நகராட்சி சார்பாக இவ்வழக்கில் ஆஜராகி வாதாட திரு. என். சுப்பரமணி வழக்கறிஞர் , உயர்நீதி மன்றம் , சென்னை அவர்களுக்கு வழக்றிஞர் கட்டணம் ரூ. 10,000/– வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு . திரு. கே. செல்வ மோகன், வருவாய் ஆய்வர் அவர்கள் தனது தினக்கூலி பணியாளர் காலத்தினை வரன்முறைறைப்படுத்தி ஓய்வூதிய பங்களிப்பு திட்டத்திற்கு பிற்கால சேமநல நிதியில் சேர்த்து ஓய்வூதிய திட்டத்தில் கொண்டு வர தொடரப்பட்ட வழக்கிற்கான கட்டணத் தொகை அரசு சார்பாக இவ்வழக்கில் ஆஜராகி வாதாட அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களுக்கான தொகை ரூ. 18,000/– மற்றும் இந்நகராட்சி சார்பாக இவ்வழக்கில் ஆஜராகி வாதாட ரூ. 10000/– வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்.3.** சென்னை – 5 , நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண் 26113/2017/எச்3 நாள் 22/01/2018 – ன் உத்திரவில் டாக்டர் ஜி. ஹேமலதாதேவி என்பவர் இந்நகராட்சியில் ஆரம்ப சுகாதார மையத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து நீண்ட நாட்கள் பணிக்கு வருகை தராததால் அன்னாரை பணியிலிருந்து terminated செய்து வழங்கப்பட்டுள்ள ஆணையின் விவரத்தினை 12/04/2018 ம் தேதிய தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதற்கான தொகை ரூ. 4452/– ஐ தினத்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்.4.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குள் அனுமதியற்ற மனைப்பரிவுகள் வரன்முறைப்டுத்தி கொள்ள விண்ணபிக்க வேண்டிய இணையதள முகவரி குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் 10' x 8' சதுரடி அளவில் 5 எண்ணிக்கை அளவில் Flex Board வைக்கவும், 2000 நோட்டிஸ் A4 Size அச்சடித்து கொடுக்கவும் 05.04.2018 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரபடி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலை பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவு தொடர்பாக 10' x 8' அளவில் Square tube chart மூலம் பேனர் 5 எண்ணிக்கை வைக்கவும், 2000 நோட்டிஸ் A4 Size அச்சிட்டு கொடுக்கவும். | திருமதி. S. பரிமளா w/o சுவாமிநாதன் நெல்லிக்குப்பம் 5750 x 5 20000 நோட்டிஸ் 3500 | ரூ. 32250/– |
| | | திருமதி. புவனேஸ்வரி பாரதியார் தெரு, நெல்லிக்குப்பம் | ரூ. 48700/– |
| | | திரு. என். சந்திர சேகர் நெல்லிக்குப்பம் | ரூ. 43500/– |

அலுவலக குறிப்பு

1) தீர்மான எண் 74, நாள் 31.05.2017 ல் மன்றம் அனுமதித்துள்ளது.
2) வரப் பெற்ற மூன்று விலைப்புள்ளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்த திருமதி. S. பரிமளா w/o சுவாமிநாதன் என்வரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3) தனி அலுலவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம்.
4) விளம்பர பலகை வைக்கப்பட்டுள்ளதால் அவசரஅவசியம் கருதி தொகையினை விடுவிக்கலாம்.

( ந .க.எண் 1403/2017எப்1)

**<u>மன்றப்பொருள்.5.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 33, நாள் 01.02.2018 ன்படி 12.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் .25 காமராஜ் நகர் தெருவிற்கு மழை நீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 4.50 | M/s.அருணாச்சல அசோசியேட் | **0.07%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.k.N.முருகன் | **0.84 %** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :</u> – **1.**வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.07 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.அருணாச்சல அசோசியேட் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .

**(ந.க.எண் .0491/2018/இ1)**

**<u>மன்றப்பொருள். 6 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 41, நாள் 01.02.2018 ன்படி 12.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 7, கைலாச நாதர் கோயில் தெருவிற்கு , இரண்டு சிறுபாலங்கள் அமைத்தல் பணி. | 0.50 | M/s.அருணாச்சல அசோசியேட் | **0.02%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.k.N.முருகன் | **0.39 %** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :</u> – **1.**வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.02 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.அருணாச்சல அசோசியேட் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .

**(ந.க.எண் .0550/2018/இ1)**

**<u>மன்றப்பொருள்.7.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொதுப்பணி துறை மூலம் வெள்ளபாக்கம் கால்வாய் தூர்வாரி சுத்தம் செய்யபட்டு அமைக்கப்பட்டு வருகிறது. இதில் திடீர்குப்பம் செல்லும் வழியில் உள்ள கால்வாய் குறுக்கே அமைக்கப்பட்ட சிறுபாலம் சேதம் அடைந்தும் மிகவும் தாழ்வான மட்டத்தில் உள்ளது. இதனால் மழைக்காலங்களில் மழைநீர் திடீர்குப்பம் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் சென்று விடுகிறது .இது சம்மந்தமாக முதலமைச்சர் தனிப்பிரிவு மூலம் பொது மக்களிடமிருந்து புகார் மனு வரப்பெற்றுள்ளது . எனவே மேற்படி சிறுபாலத்தை இடித்துவிட்டு புதியதாக உயர்த்தி கட்ட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.8,50,000/—க்கு செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு : —</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 2084/2018/இ1)**

**<u>மன்றப்பொருள்.8 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் K.S.A.R மெயின் ரோட்டில் ஏற்கனவே அமைக்கப்பட்ட குடிநீர் பகிர்மான குழாய் அதிக இடங்களில் சேதம் அடைந்துள்ளது . இதன் பகுதியில் அமைந்துள்ள மரங்களின் வேர்கள் குழாயில் அடிக்கடி அடைப்பு ஏற்படுத்துகிறது . இதனால் பூலோகநாதர் கோவில் , காமராஜ் நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் அடிக்கடி பாதிக்கப்படுகின்றது . எனவே புதியதாக D.I பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,00,000/— செலவை நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு : —</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 2085/2018 /இ1)**

**<u>மன்றப்பொருள்.9 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017 ஆண்டிற்கான ஒகி புயல் மற்றும் இடைவிடாத மழை நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 79, நாள் 28.03.2018 ன்படி 24.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வான்பாக்கம் மெயின் ரொடு , கைலாசநாதர் கோயில் தெருவில் இருந்து ஸ்வீட் சிட்டி வரையும் திருகண்டேஸ்வரம் மெயின் ரோடு பள்ளியில் இருந்து வார்டு எல்லை வரையும் , முள்ளிகிராம்பட்டு ரோடு காவலர் குடியிருப்பில் இருந்து கருமகாரிய கொட்டகை வரையும் சேதம் அடைந்த இடங்களை சரி செய்யும் பணி . | 2.40 | 1. திருமதி.S.புவனேஸ்வரி | **0.28%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | 2 திருமதி.S. பரிமளா | **2.37 %** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :–</u> **1.**வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.28 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திருமதி.S.புவனேஸ்வரி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .

**(ந.க.எண் . 1420/2018 /இ1)**

**<u>மன்றப்பொருள்.10.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மை பணிக்குறித்த ஒருங்கிணைப்பு வரைபடம் மற்றும் **1** முதல் **30** வார்டுகளுக்கான தனித்தனியே உள்ள வரைபடத்தில் , திடக்கழிவு மேலாண்மை குறித்த விவரங்களை **(**குப்பை எடுக்கும் ஆரம்ப இடம், முடியும் இடம், பகுதி மேற்பார்வையின் விவரம் , வாகனம் சென்று வரும் Route Chart) குறியீட்டு புத்தக வடிவில் **5** எண்ணம் தயார் செய்ய வேண்டி , தனிநபர் மூலம் பணி மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினத் தொகை தோராயமாக ரூ.**30000/–** மட்டும் தூய்மை இந்தியா திட்டம் IEC நிதியின் கீழ் செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு :–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 2438/2015 /இ2)**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.